| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | வையாபுரி | நாள் | 25.02.2021 |
| தகப்பனார் பெயர் | குப்பண்ணக்கவுண்டர் | | |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்னுடைய தகப்பனார் பெயர் குப்பண்ணக்கவுண்டர். என்னுடைய தகப்பனாருக்கு எத்தனை மனைவிகள் என்றால் ஒரு மனைவி தான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 3 பெண்மக்கள், 2 ஆண்கள். எங்களுடைய பூர்வீக சொத்து எத்தனை சொத்துக்கள் இருக்கும் என்றால் 1 ஏக்கர் விற்பனை செய்துவிட்டார்கள். தற்போது 1 ஏக்கர் 40 சென்ட் உள்ளது. அந்த 1 ஏக்கர் 40 சென்டை யார் வாங்கினார்கள் என்றால் என்னுடைய பாட்டன்மார்கள் வாங்கியது. என்னுடைய தாயார் 65 சென்டை வாங்கியுள்ளார். எப்போது வாங்கினார்கள் என்றால் என்னால் கூறமுடியாது. பெரமகவுண்டர் என்னுடைய மகன். 3 ம் பிரதிவாதி மயிலி என்னுடைய தங்கை. 4 ம் பிரதிவாதி அம்மாசி அனைவருக்கும் மூத்தவர். 5 ம் பிரதிவாதி என்னுடைய அக்கா. 6 முதல் 8 பிரதிவாதிகள் என்னுடைய அக்காவின் மகன்கள். அனைத்து பிரதிவாதிகளும் ஒன்றாக பதில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் நானும் பதில் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு எவ்வளவு சொத்துகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 1/2 ஏக்கர் என்னுடைய அண்ணன் ஓட்டினார் எனவும், அவர் ஓட்டவில்லை எனக்கூறி தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் பார்த்தால் தான் தெரியும்.

வாதி வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/-எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.